வரலாற்றுச் சுவடு

கலைஞர்

மோனாலிசா

தி.மு.க. அறக்கட்டளை
ஆய்வக நூல்நிலையம்
சென்னை-18
அறிவாலயம்



1987

1988

தி. மு. க. தலைமை நிலைய வெளியீடு
'அறிவகம்' சென்னை-13.

விலை: 30 காசு

1.9.1975

வரலாற்றுச் சுவடு

அறக்கட்டளை
ஆய்வக
நூல்நிலையம்
சென்னை-18.
அறிவரசு

மதுரை அமெரிக்கன் கல்லூரி மாணவர் பேரவை தொடக்க விழாவில் தலைவர் கலைஞர் ஆற்றிய உரை:

க 342.84
5403

இதற்கு முன்பு நான் இந்தக்கல்லூரிக்கு வந்த போது நீங்கள் என்னிடத்தில் கேட்ட தன்னுட்சி உங்களுக்குக் கிடைத்திருக்கிறது; ஆனால் நான் கேட்ட தன்னுட்சிதான் இன்னும் கிடைக்கவில்லை. (கைதட்டல்)

தன்னுட்சிக்கும் தனியாட்சிக்குமுள்ள வேறு பாட்டைப்புரிந்து கொள்ளாத காரணத்தால் அதைத்தெரிந்து கொள்வதற்கான நேரம் கிடைக்காத காரணத்தாலும், மேலே இருப்பவர்களின் நேரமும் நினைப்பும் வேறு எது எதற்கோ பயன்பட்டுவருகிற காரணத்தால் (சிரிப்பு பலத்தகைதட்டல்) நாம் கேட்டது கிடைக்கவில்லை.

'தன்னுட்சி' என்ற சொல்லிலும் – 'தனியாட்சி' என்ற சொல்லிலும் இருக்கின்ற 'ன்' என்ற எழுத்துக்கும் 'னி' என்ற எழுத்துக்குமுள்ள வேறுபாட்டை உணர்ந்து உற்ற கோரிக்கையாம் தன்னுட்சிக் கோரிக்கையைத் தருவதற்கு இன்னும் முன்வராமல் இருக்கிறார்கள்.

இந்தக் கல்லூரிக்கு நான், தமிழ்நாட்டை ஆளும் பொறுப்பேற்றிருந்தபோது, முதல்வராக வந்திருக்கிறேன். இன்றும் முதல்வர் இல்லாத குறையை நம்முடைய முதல்வர் போக்கிக் கொண்டிருக்கிறார். கல்லூரி முதல்வரைத்தான் சொல்லுகிறேன். (சிரிப்பு)

நான் இன்றையதினம் ஒரு எதிர்க்கட்சியினுடைய தலைவனாக உங்கள் முன்னால் நின்று கொண்டிருக்கிறேன். முதல்வரும் எதிர்க்கட்சித் தலைவரும் ஒரே மேடையில் இருப்பது தமிழ்நாட்டில் நடைபெறுத ஒன்று! (கை தட்டல்) அது மக்களாட்சி மாண்பைக்

குறிக்கின்ற ஒன்று! இருப்பினும் இந்த முதல்வருடனு வது ஒரே மேடையில் எதிர்க்கட்சித் தலைவனுகிய நான் சில கருத்துக்களை வழங்கிடவும், இந்தப் பேரவையைத் தொடங்கி வைக்கவும் வாய்ப்புத் தந்த மாணவ மணிகளுக்கும்—பேராசிரிய நண்பர்களுக்கும் – கல்லூரி முதல்வர் அவர்களுக்கும் இதயமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வெல்லப்பா தந்த செல்லப்பா!

தொடக்கத்தில் நெடுமாறன் என்னை வரவேற்றுப் பேசினர். மதுரையிலேயிருந்து ஒரு நெடுமாறன் என்னை வரவேற்பது (பலத்த கையொலி) மகிழ்ச்சியைத் தரத் தக்க ஒன்றுகும்!

கல்லூரி முதல்வர் 'செல்லப்பா' என்ற பெயருக் கேற்ப என்னைப் பற்றி பாராட்டுரை என்ற பெயரால் வெல்லப்பா பாடியிருக்கிறார். (சிரிப்பு) வெல்லம் போன்ற இனிப்புப் பா பாடியிருக்கிறார்.

கல்லூரி முதல்வரும், வரவேற்புரை யாற்றிய நெடுமாறன் அவர்களும் பேரவைக்குத் தலைமை வகிக் கின்ற சீனிவாசகம் அவர்களும் என்னைப் பற்றி வழங் கிய சிறப்புரைகளுக்கு நான் தகுதி படைத்தவனு, இல்லையா என்பது கேள்விக்குரிய ஒன்று என்றாலும் வரும் விருந்தாளிகளை வாயார–மனமார வரவேற்பது தமிழர்களின் பண்பாடு என்ற வகையில் அவர்கள் என்னை வரவேற்றார்கள் என்று நான் கருதுகின்றேன்.

வழங்கப்பட்ட சிறப்புரைகள் என்னுடைய வழி யிலே நான் மேலும் வேகமாகச் செல்ல என்னை ஊக் கப்படுத்தவும், உற்சாகப்படுத்தவும் ஓய்வின்றி உழைத் திடவும் பயன்படுமேயானால் அந்த சிறப்புரைகளை நான் தனிப்பட்ட முறையில் ஏற்றுக் கொள்கிறேன்.

இன்றைக்கு இந்தியத் துணைக் கண்டத்தின் பர பரப்பான நிலை– யார் நம்மை ஆளுகிறார்கள், ஆளப் போகிறார்கள் என்கின்ற வினுக் குறிக்கு இடையே உள்ள நிலை.

பரபரப்புக்கும் பதட்டத்திற்கும் ஆளாகி விடக் கூடிய மனேநிலை டடைத்த மாணவர்கள் பரபரப்போ, பதட்டமோ இல்லாமல் ஆரவாரமின்றி அமெரிக்கன் கல்லூரியின் நீண்ட புகழ் எட்டுத் திக்கும் பரவிடும் வண்ணம் இந்த மாமன்றத்தில் கூடி இந்தப் பேரவை

தொடக்க விழாவுக்கு ஒத்துழைப்பது குறித்து மாணவ உடன் பிறப்புகளுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். (கைதட்டல்)

ஒருநாடு தன்னுடைய வரலாற்றை உணர்ந்த மக்களை உள்ளடக்கியதாக இருந்திட வேண்டும்.

நாட்டுக்கு எத்தனையோ பழம்பெரும் சிறப்புக்களெல்லாம் இருக்கலாம். ஆனால் அந்த நாடு அந்த நாட்டுக்குரிய வரலாற்றை உணர்ந்து கொள்ளப்பட்டவர்களால் நிரம்பிய நாடாக இருந்தால்தான் அது உலகத்தோடு போட்டி போட்டுக்கூடிய வளர்ச்சியைப் பெற முடியும்.

அந்த வகையில் இந்திய நாட்டில் நமக்கென்று உள்ள வரலாறுகளை வரலாற்றுப் பேராசிரியர்கள் கூடிச் சிந்தித்து, அல்லது தனித்தனியாக சிந்தித்து எத்தனையோ வரலாற்றுப் பனுவல்களை அளித்திருக்கிறார்கள்.

ஆற்றோரம்: அண்ணா சொன்ன உண்மை!

தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில், அறிஞர் பெருமக்களுக்கும், புலவர் பெருமக்களுக்கும் ஒரு பெருங்குறையுண்டு. இந்தியாவினுடைய வரலாறு காவிரி நதி தீரத்திலிருந்து எழுதப்பட வேண்டுமா, கங்கை நதியோரத்திலிருந்து தொடங்கப்பட வேண்டுமா என்ற கருத்தின் அடிப்படையில்தான் பல்லாண்டு காலத்திற்கு முன்பு பேரறிஞர் அண்ணா அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே சொற்பொழிவாற்றும் போது குறிப்பிட்டார்கள்! அவர் சொற்பொழிவாற்றத் தரப்பெற்ற பொருள் ''ஆற்றோரம்'' என்பதாகும்!

'ஆற்றோரம்' என்ற தலைப்பு திடீரென்று வழங்கப்பட்டபோதும் அவர் திடுக்கிடவில்லை; தயங்கிடவில்லை— எப்படி உரையாற்றப் போகிறோம் இந்தத் தலைப்பிலே என்று திகைத்ததுமில்லை.

'ஆற்றோரம்' என்ற தலைப்பில் அவர் ஆற்றிய உரையில்தான் 'இந்திய நாட்டு வரலாறு கங்கை நதிக் கரையிலிருந்து தொடங்கப்பட்டது தவறு; காவிரி ஆற்றுக் கரையிலிருந்து துவக்கி இருக்க வேண்டும்' என்றார்.

அவர் அப்படிச் சொல்லக் காரணம் 'கல்தோன்றி மண்தோன்றுக் காலத்தே முன்தோன்றி மூத்தகுடி' தமிழ்க்குடி, என்ற பதிலும் தந்தார். இந்தியாவையும் இலங்கையையும் ஒட்டியிருந்த லெமூரியா கண்டம் ஒரு காலத்தில் கடற்கோளால் இழக்கப்பட்டது. வரலாறு அங்கேயிருந்து கூட ஆரம்பமாகும் தகுதி அந்த இடத்திற்கு இருக்கிறது.

கிருஸ்து பிறப்பதற்கு 21 ஆண்டுகளுக்குமுன்பே பூம்புகாரையும் உறையூரையும் தலைநகரமாகக் கொண்டு திருமாவளவன் கரிகால் பெருவளத்தான் அவனிபுகழும் அளவுக்கு அரசாண்டான்!

அந்த நேரத்தில் இந்தப் பாண்டிய மண்டலத்திலேயுள்ள தூதுவர் ரோமாபுரிப் பட்டணத்திலுள்ள மாமன்னரின் கொலு மண்டபத்தில் தமிழகத்திற்கும் ரோமாபுரிக்குமிடையேயுள்ள தொடர்பைப் பற்றி விவாதித்துக் கொண்டிருந்திருக்கிறார்கள் என்பதும் நமது வரலாற்றுக்குறிப்புகளாகும்.

இவைகளையெல்லாம் வரலாற்றுப் புத்தகங்களிலே நாம் விளக்கமாகப் படிக்க முடியுமா என்றால் முடியாது!

நல்லவேளையாக சங்க காலத்துப் புலவர்கள் யாத்துத் தந்த இலக்கியங்கள்—அன்று வாழ்ந்த மன்னர்களைப் புகழ்ந்து பாடிய பாக்கள்— செப்பேடுகள் இவைகளெல்லாம் நாம் தொகுத்துக் கொள்ளும் வரலாற்றின் பின்னணிகளாக இருக்கின்றன. அந்தப் பின்னணியை—இலக்கியங்களை வைத்துத்தான் தமிழ்நாட்டு மக்கள் தங்கள் வரலாற்றை வகுத்துக் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

வரலாறு என்பது பழந்தமிழர்கள் ஆண்ட அந்தக் காலத்து வரலாறுகள் மாத்திரமல்ல; தொன்மையான மொழியான நம் தமிழ் மொழிக்கும் ஒரு வரலாறு உண்டு!

தமிழ்மொழிக்கு இலக்கணம் கண்டது ஏறத்தாழ மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு என்பது புலவர்களுடைய ஆராய்ச்சி முடிவு! அதிலே சில புலவர்கள் மாறுபடுகிறார்கள் என்றாலும் மூவாயிரம் ஆண்டுகள் என்பதை இரண்டாயிரம் ஆண்டுகள் என்று சொல்லாமல் நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழுக்கு இலக்கணம் தோன்றியிருக்கிறது. தமிழுக்கு இலக்கணம் வகுத்துத் தந்தவர் தொல்காப்பியர் என்று சொல்லுகிற புலவர்கள் இருக்கிறார்களே தவிர பழமையை மறைக்கும் புலவர்கள் இல்லை.

இப்படிப்பட்ட கருத்து வேறுபாட்டினுக்கிடை யேயும் பன்னெடுங் காலத்திற்கு முன்பே பைந்தமி ழுக்கு நாம் இலக்கணம் கண்டோம் என்பதை அறி கிறோம்.

தொல்காப்பியனுக்கே ஒரு ஆசான் இருந்தான். அவன் பெயர் அதங்கோட்டு ஆசான் என்பது; அவன் குமரி மாவட்டத்தில் அதங்கோடு என்ற ஊரில் பிறந் தான். இன்றைக்கும் அந்த ஊர் இருக்கிறது. அங்கே இருந்த அவரது மாணவன்தான் தொல்காப்பியர்.

ஒரு மொழிக்கு இலக்கணம் ஏற்பட்ட காலமே மூவாயிரம், நாலாயிரம் ஆண்டு இருக்குமென்றுல் அந்த மொழி தோன்றிய வரலாற்றுக் காலம் என்னவாக இருக்குமென்று எண்ணிப் பார்க்க வேண்டும்!

முதலில்சைகைகள் மூலமாக உணர்த்தத்தொடங்கி- பிறகு கைக்கோடுகள் மூலமாக உணர்த்தத்தொடங்கி— பிறகு உதடுகளை அசைத்து, தாங்கள் என்ன எண்ணு கிறோம் என்டதை எடுத்துரைக்கத் தொடங்கி— அதன் பிறகு இரண்டு உதடுகளை மூடும்போது 'ம்' என்ற ஒலி எழும்பி அந்த உதடுகளைத் திறக்கிற போது 'அ' என்ற ஒலி எழும்பி அதுவே 'இம்மா', 'அம்மா' என்ற ஒலியாகி— பிறகு 'இப்பா, 'அப்பா' என்று மாறி (மாணவர்கள் 'அப்பப்பா....!'' என்ற வியப் போசையோடு கைதட்டி ஆரவாரம் செய்கின்றனர்.) அதற்குப் பிறகு அவர்கள் கண்ட பொருளுக்கு அவர் களாகவே ஒரு பெயரிட்டு அழைத்து கொச்சைத் தமி ழாக இருந்து —பிறகு மெல்ல மெல்ல வளம் பெற்று நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இலக்கணச் செறிவு பெற்றதென்றுல் அதற்கு முன்பு ஐயாயிரம் ஆண்டு களுக்கு முற்பட்ட மொழியாக இருக்க வேண்டும்.

அப்படிப்பட்ட முற்பட்ட மொழி உலகத்தில் தமிழ் மொழி ஒன்றுதான் என்றுல் யாரும் மறுத்திட இயலாது! (கை தட்டல்)

—ஆக நம்முடைய மொழிக்கும் தனி வரலாறு உண்டு!

அந்த வரலாறுகளை படிக்க வேண்டும் என்ற ஆர் வம்— அந்த வரலாற்றில் பங்கு கொள்ள வேண்டும் என்ற துடிப்பு இடைக்காலத்தில் மாண்டுமறைந்தது. அவைகளையெல்லாம் மங்காமல் காப்பாற்ற வேண்டும் என்ற கருத்தினைத்தான் பேரறிஞர் அண்ணு அவர்கள் சென்னை விருகம்பாக்கத்தில் நடைபெற்ற மாநாட்டில்

மூதறிஞர் ராஜாஜி, கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் மற்றும் பல்வேறு கட்சித் தலைவர்களையும் பக்கத்தில் உட்கார வைத்துக் கொண்டு சொன்னர்–

''நான் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தாலும், வராவிட்டாலும், ஆட்சிப்பொறுப்பில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் என்னுடைய இயக்கத்திற்கு இன்னும் 50 ஆண்டு காலம் தமிழகத்திற்கு ஆற்ற வேண்டிய பணிகள் இருக்கின்றன. அந்தப் பணிகளை நாங்கள் ஆற்றி முடிக்க வேண்டும். ஆட்சிப் பொறுப்பில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் நாங்கள் அந்தக் கடமைகளை நிறைவேற்றிக் கொண்டே இருப்போம். தமிழர்களின் மரபு காப்பாற்றப்படவும் - மானம் போற்றப்படவும்– அவர்களின் வரலாறு மங்காமல் காக்கப்படவும் தமிழ் இலக்கியங்களுக்கு இன்னுமொரு அழிவு ஏற்படாமல் பாதுகாக்கவும் நாம் பணியாற்ற வேண்டும்'' என்று சொன்னர்.

இவைகளே அன்னியில் ஆயிரங்காலத்து வரலாறுகளை மறந்துவிட்டோம் என்றாலும் பழம்பெரும் காலம் எனவே அதை மறந்து விட்டோம் என்று நம்முடைய மனதை நாம் தேற்றிக் கொள்ளலாம்.

ஆனால் அறுபது, எழுபதாண்டு வரலாற்றைக் கூட நாம் மறந்து விட்ட நிலையில் இன்றைக்கு இருக்கின்றோம்.

தமிழகத்தைப் பொறுத்த வரையில் அரசியலில் அறுபது ஆண்டுக்கால வரலாறு உண்டு.

அதற்குமுன்பு இந்திய நாட்டின் விடுதலைக்காகப் போரிட்ட வீரர்களின் சுமார் நூறுண்டு கால வரலாற்றில் தமிழ்நாட்டிலிருந்து போரிட்ட வீரர்களுக்கும் பங்கு உண்டு!

அங்கே ஒரு பகவத்சிங் வெள்ளையனை எதிர்த்து தூக்கு மேடை ஏற வேண்டிய நிலைமை ஏற்பட்டது என்றால் அதைப்போலவே இங்கே வ. உ. சிதம்பனர் சிறைச்சாலையில் செக்கிழுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

பகவத் சிங்குக்கும் முன்பு பாஞ்சாலங்குறிச்சியில் இருந்து கொண்டு வெள்ளைக்காரர்களை எதிர்த்து கயத்தாற்றிலே கட்டபொம்மன் ஒரு மரத்திலே தூக்கில் தொங்க விடப்பட்ட வரலாறும்–

வெள்ளையரை எதிர்த்த ஊமைத்துரையும் அதே கதிக்கு ஆளானான் என்ற வரலாறும்–

அவர்களைப் போலவே மருதுபாண்டியர்களும் வெள்ளையர்களால் வீழ்த்தப்பட்டார்கள் என்ற வரலாறும்–

அதனைப்போலவே தென்னகத்தில் ஸ்ரீரங்கப் பட்டணத்தைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட திப்பு சுல்தான் வெள்ளையனை எதிர்த்துப் போர்க்களத்தி லேயே வீழ்ந்தான் என்ற வரலாறும்–

இவைகளெல்லாம் இந்திய நாட்டில்வெள்ளையர் களின் ஆதிக்கத்தை தொடக்க காலத்திலேயே இங்கே எதிர்த்த வரலாறுகும்.

இப்படிப்பட்ட வரலாற்றில் தொடங்கி உத்த மர் காந்தியடிகளின் அரசியல் நுழைவுக்குப் பிறகு இந்திய தேசிய விடுதலை இயக்கம் புதிய வளர்ச்சியைப் பெற்று பல்லாயிரக்கணக்கானோர் சிறைச்சாலைகளில் தங்களை வாட்டிக் கொண்ட நிலை ஏற்பட்ட காலத்தி லும் –பண்டித ஜவகர்லால் நேரு தன்னுடைய வாலிப வசந்த காலத்தை சிறையிலேயே கழிக்க வேண்டிய நிலை ஏற்பட்ட காலத்திலும், இங்கே மறைந்த பெருந் தலைவர் காமராசரும், பத்து பதினைந்து ஆண்டுகள் சிறையில் இருக்க வேண்டிய நிலை ஏற்பட்ட காலத்திலும் வைக்கம் வீரர் தந்தை பெரியாரையும் அவரது துணைவியார் நாகம்மையாரையும் கலந்து பேசி விட்டு தமிழ்நாட்டு அரசியல் பணிகளை மேற்கொள்ளுங்கள் என்று காந்தியடிகளே சொல்லும் அளவுக்கு போற்றக் கூடியவர்களாக தந்தை பெரியாரும் நாகம்மையாரும் பாடுபட்டார்கள் என்பதும் வரலாற்று நிகழ்ச்சிகளா கும்!

அப்படிப்பட்ட கால கட்டத்திலேதான் பெரி யாரைப் போன்றவர்கள் சிந்தித்தார்கள்.

நீதிக்கட்சித் தலைவர்கள் சிந்தித்தது என்ன?

தமிழ்நாட்டில் நீதிக்கட்சி, தென்னிந்திய நல உரிமைச் சங்கம் என்ற ஒரு இயக்கம் தோன்றி 'இந் தியாவின் விடுதலையைப் பெற வேண்டும்; அதே நேரத் தில் விடுதலை நமது குறிக்கோள்; அந்த விடுதலைக்கு பிறகு மக்கள் எப்படி வாழ வேண்டும். சமதர்மம், சமத்துவம் என்பது இல்லாமல் விடுதலையை மட்டும்

வாங்கி விட்டோமானால் அது பாரதி பாடியது போல 'கண்ணிரண்டும் விற்று சித்திரம் வாங்கியது' போன்ற கதையாகி விடும் என்று கருதி சிந்தித்தவர்களும் அன்று நாட்டில் இருந்தார்கள்.

அப்படி சிந்தித்த இயக்கம்தான் நீதிக்கட்சி— திராவிடர் இயக்கம்!

நான் 'திராவிட' என்ற சொல்லைப் பயன்படுத்து கின்ற காரணத்தால் திராவிடர்—ஆரியர் என்று பிரித்துப் பேச இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள் கிறேன் என்று யாரும் தவறுகக் கருதக்கூடாது.

ஆரியர்—திராவிடர் என்பது இந்திய நாட்டு வர லாற்றில் மறைக்க முடியாத குறிப்புகள், அதற்கான ஆதாரங்கள் எத்தனையோ கல்வெட்டுகள்— செப்பேடு கள்—அகழ்வாராய்ச்சிகள் மூலம் கிடைத்துக்கொண்டே இருக்கின்றன.

பண்டித நேரு அவர்கள் சிறைச்சாலையிலிருந்து தன்னுடைய மகள் இந்திரா பிரியதர்சினிக்கு எழுதிய கடிதத்தில் ''இராமாயணம் என்பதே—இராம-இராவண யுத்தம் ஆரிய -- திராவிடப் போராட்டம் தான்...!'' என்று குறிப்பிடுகிறார். குறிப்பிட்டவர் பெரியாரல்ல — அண்ணா அல்ல—நானல்ல; பண்டித ஜவகர்லால்நேரு!

எனவே ஆரியக் கலாச்சாரம் —திராவிடக் கலாச் சாரம் என்ற இரண்டு கலாச்சாரங்கள் ஒரு காலத்தில் இந்தியாவில் இருந்தன என்பதை ராகவய்யங்கார் போன்றவர்கள் பிராமணசமுதாயத்தைச் சேர்ந்த வர லாற்றுப் பேராசிரியர்கள் அத்தனை பேரும் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்!

இதை நாங்கள் எடுத்துச் சொல்கிற காரணத்தால் வேண்டுமானால் அதற்கு வேறு வண்ணங்களை யாராவது பூசலாம். எனவே இந்த இரண்டு கலாசாரங்கள் இந் தியாவில் உண்டு.

இந்த இரண்டு கலாச்சார மக்களுக்கும் இரு வேறு மொழித் தொகுப்பு உண்டு!

திராவிடக் கலாசாரத்தை ஏற்றுக் கொண்டவர் களின் மொழிகள்தான்—தமிழ்—தெலுங்கு— கன்னடம்— மலையாளம்—துளு என்ற மொழிகளாகும்!

சமஸ்கிருதம்–அதையொட்டிப் பிறந்த மொழிகளாகக் கருதப்படுகின்ற பல்வேறுபட்ட இந்தி மொழிகள் ஆரியக் கலாச்சார குடும்பத்தைச் சேர்ந்தவைகளாகும்!

இத்தகைய கலாச்சாரங்கள் இருக்கின்றன. தமிழகத்தைப் பொறுத்த வரை ஒரு கலாச்சாரம் இன்னெரு கலாச்சாரத்தை ஆதிக்கம் செய்கின்ற அளவுக்கு நிலைமை மாறிய காரணத்தால் இங்கே வந்து குடியேறியவர்கள் எண்ணிக்கையில் குறைவானவர்களாக இருந்தாலும், அவர்கள் தங்கள் கலாச்சாரத்தை கலை மூலம்–காட்சிகள் மூலம்–நூல்கள் மூலம்-ஆண்டவன் மூலம்–மதப் பிரச்சார ஏடுகளின் மூலம் பரப்பியதன் காரணமாக அது வலுப்பெற்றதாக அமைந்தது!

திராவிடக் கலாச்சாரத்தைப் பரப்புவதற்காக பல பேர் முயன்றார்கள் என்றாலும் அந்த முயற்சியில் ஈடுபட்ட பெரும் புலவர்கள் பௌத்த–சமண சமயத்தைச் சேர்ந்தவர்களாக இருந்த காரணத்தால் அவர்களுக்குக் கலையே பிடிக்காது. அவர்கள் கலைகளை அறவே வெறுத்தார்கள்.

ஆனால், வைணவம், சைவம் போன்றவை ஆரிய கலாச்சாரத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, மொழிகள் கலைகள், நூல்கள், காட்சிகள் ஆகிய இத்தனையையும் அவர்கள் பயன்படுத்திக்கொண்ட காரணத்தினால் எண்ணிக்கையில் குறைவாக உள்ளவர்களின் கலாச்சாரம் தமிழகத்தில் வேரூன்றத் தலைப்பட்டது. அது வேரூன்றத் தலைப்பட்டது மாத்திரமல்ல; எண்ணிக்கையில் பெருவாரியாக இருந்த இன்னெரு பக்கத்து மக்கள் படிப்பற்றவர்களாக, கல்விச்சாலைக்குச் செல்வதேகூட கடவுளுக்குச் செய்யும் துரோகம் என்று கருதக்கூடியவர்களாக தங்களைத் தாங்களே ஆக்கிக் கொண்டார்கள்.

மற்றவர்கள் இப்படிச் செய்தார்கள் என்று குற்றம் சாட்டுவதை விட நாமே அந்தக் கதிக்கு நம்மை ஆளாக்கிக் கொண்டோம் என்பதற்கான தன்னிலை விளக்கம் அளிப்பதுதான் நல்லது!

வெள்ளைக்காரன் நம்மை அடிமைப்படுத்தினான்–அது அவன் நம்மை ஆதிக்கம் செலுத்துவதற்காக நடத்திய காரியம்!

ஆனால் கிட்டத்தட்ட இருநூறுண்டுக் காலம் அடிமைகளாக வாழ்ந்தோம் என்றால், அதை நாம்

உணர்ந்திடவில்லை; விழிப்படையவில்லை. அன்னிய ஆதிக்கம் கூடாது என்று நாம் போர்க்குரல் எழுப்ப வில்லை. அந்த அளவுக்கு அடங்கிக் கிடந்தோம் ஆமை களாக — ஊமைகளாக — பொட்டுப்பூச்சிகளாக — புன்மைத் தேரைகளாக—புழுக்களாகத் தான் இருந் தோம்!

வெள்ளைக்காரன் நம்மை அடிமைப்படுத்திஞன் என்று அவனைச் குற்றம் சாட்டுவதை விட இருநூறு ஆண்டு காலம் அடிமைகளாக இருந்தோமே அது அதைவிடக் கேவலம் அல்லவா?

வகுப்புவாதிகள் என்று பழிக்கப்பட்டோம்!

அதைப் போலத்தான் 'நீ படிக்காதே' என்று ஆண்டவன் பெயரால் யாராவது ஆணைகள் போட்டிருந் தால், இதிகாச, சாத்திரங்களைக் காட்டியிருந்தால், மனுதர்ம சாஸ்திரத்தை நீட்டி இருந்தால் –புதுப்புது வியாக்கியானங்களைத் தீட்டியிருந்தால் அவர்கள் மீது குற்றம் சாட்டுவதை விட, இதையெல்லாம் ஏற்றுக் கொண்டு எங்கள் தலைவிதி அவ்வளவுதான்; ஆண்டவன் படைத்தபோதே எங்கள் தலையில் அப்படித்தான் எழுதி வைத்து விட்டான் என்று ஏதோ தலையிலுள்ள எழுத் துக்களைப் பார்த்து—படித்துப் பார்த்து இப்படித்தான் நாம் ஆடுமாடு மேய்க்க வேண்டும்– வண்டி ஓட்ட வேண்டும்–ஏர் ஓட்ட வேண்டும்–கழனியில் கஷ்டப்பட வேண்டும்–நாம் மற்றவர்களுக்கு தோட்டிகளாக – தொழும்பர்களாக இருக்கத்தக்கவர்கள்தான் என்று அடிமைமுறிச்சீட்டில் நாமே கையெழுத்துப் போட்டு ஆயிரமாயிரம் ஆண்டுக் காலமாக நம்மைத் தாழ்த்திக் கொண்டோம்!

வாழ்ந்த சமுதாயம் இடையில் வீழ்ந்தது என்றால்–ஆண்ட சமுதாயம் தனது வரலாற்றுப் பெரு மைகளையெல்லாம் மறந்துமாண்டதுஎன்றால்—அப்படிப் பட்ட ''பெருமைக்குரிய''? சமுதாயம் நமது சமுதாயத் தைத்தவிர உலகில் வேறு எந்த சமுதாயமுமில்லை என் பதை மிகுந்த மனவேதனையோடு தெரிவித்துக் கொள் கிறேன்.

அப்படிப்பட்ட சமுதாயத்திற்கு விழிப்புணர்ச்சி யும்—புத்துணர்ச்சியும் — புது எழுச்சியும் ஏற்படுத்தத் தான் 1914-ஆம் ஆண்டு சில பேர் அந்த விழிப்புணர்ச் சிக்கு வித்திட்டார்கள்! அவர்களெல்லாம் அன்று வகுப்பு வாதிகள் என்று பழிக்கப்பட்டார்கள்.

அப்படிப்பட்ட விழிப்புணர்ச்சிக்கு வித்திட்ட தியாகராயர்–டாக்டர் நாயர்–நடேசனர்– தன்மானத்

தந்தை பெரியார் போன்றவர்கள் தலைமையேற்று அந்தப் பணியை தொடர்ந்து செய்தார்கள்.

சேரன்மாதேவி கற்பித்த பாடம்!

அப்போது தந்தை பெரியார் அவர்கள் இந்தியாவின் சுதந்திரத்திற்காக மிக வேகமாகப் போரிட்டுக் கொண்டிருந்த காலம்! திராவிட இயக்கம் கேட்ட சமூகநீதி பெரியாரை ஈர்க்கத் தொடங்கியது. இந்தியாவின் விடுதலை வேண்டும். உண்மைதான். ஆனால் அதே நேரத்தில் விடுதலை கிடைத்த பிறகு இந்த நாட்டு மக்களின் நிலை என்ன? அதைப்பற்றியும் நினைத்துப் பார்க்கவேண்டும். அதுவும் தேவைதான். அந்தத் தேவையை பெரியாருக்கு உணர்த்தக்கூடிய சம்பவங்கள் நடைபெற்றன. மதுரை மாவட்டத்திற்கு அருகில் உள்ள நெல்லை மாவட்டத்தில் சேரன்மாதேவி என்ற இடத்தில் இந்த சம்பவம் நடைபெற்றது.

காந்தியினுடைய உண்மையான சீடர்களில் ஒருவரென வர்ணிக்கப்பட்ட வ.வே.சு. ஐயர் அவர்கள் நடத்திய குருகுலம்.

காந்தியாரை தம்முடைய குருநாதராக ஏற்றுக் கொண்டவர்களால் நடத்தப்பட்ட குருகுலம்?

தீண்டாமை ஒழிய வேண்டும்—சாதி மத பேதம் இருக்கக்கூடாது என்று வடலூர் வள்ளலார் இராமலிங்க அடிகளைப் போல் வாழ்ந்து கொண்டிருந்த உத்தமர் காந்தியடிகளின் சீடர்களால் நடத்தப்பட்ட குருகுலம்.

அந்த சேரன்மாதேவி குருகுலத்தில் எல்லோரும் கதராடை அணிந்த மாணவர்களாக இருந்தாலும்—எல்லோரும் காந்தியடிகளின் உருவம் பொறித்த பதக்கத்தை தங்கள் சட்டைகளில் அணிந்து இருந்தாலும்—எல்லோரும் காந்தியடிகளைப் போல தக்ளியில் நூல் நூற்றாலும்—எல்லோரும் காந்தியடிகளின் போதனைகளை ஏற்று கைராட்டை சுழற்றினாலும் அந்த ''எல்லோரும்'' தக்ளி நூற்கும்போது எல்லோரும்!— கதராடை அணியும் போது எல்லோரும்— 'காந்தி மகாத்மாவுக்கு ஜே!' என்று கோஷம் போடுகிற நேரத்திலே எல்லோரும்!

ஆனால் சாப்பிட அமருகிற நேரத்தில் தனித்தனி!

இது சேரன்மாதேவியில் வ.வே.சு. ஐயரால் நடத்தப்பட்ட குருகுலத்தில் இழைக்கப்பட்ட அநீதி!

அதே இயக்கத்தில் தன்னை ஒப்படைத்துக் கொண்டிருந்த பெரியார் அவர்கள் அதைக் கண்டு வெகுண்டெழுந்தார்.

நாம் சுதந்திரத்திற்காகப் பாடுபடுகிறோம் — நாட்டின், மண்ணின் சுதந்திரத்திற்காகப் பாடுபடுகிறோம். ஆனால் இந்த மண்ணில் செடி, கொடிகளாக முளைத்திருக்கின்ற மக்கள் விடுதலை பெற வேண்டாமா?- என்று குருகுலம் பற்றி பெரியார் கேட்டார். அவருக்கு ஆதரவாக காங்கிரசில் பலர் இருந்தார்கள்.

அந்த நேரத்தில்தான் நீதிக் கட்சி எழுப்பிய வகுப்புரிமைக்குரல் பெரியாரைக் கவர்ந்தது. அந்த வகுப்புரிமையை காங்கிரஸ் இயக்கம், தேசிய இயக்கம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று பெரியார் போராடினார்.

காஞ்சீபுரத்தில் — தமிழ்த்தென்றல் திரு வி.க. தலைமையில் நடைபெற்ற மாநாட்டில்—வகுப்புரிமைத் தீர்மானத்தை பெரியார் கொண்டு போனார். திரு. வி.க. போன்றவர்கள் ''சாதியே ஒழிய வேண்டும் என்று சொல்கிற நேரத்தில் வகுப்புரிமை வேண்டும் என்பது அந்தந்த வகுப்புக்களின் தனித்தனி உரிமைகள் எண்ணிக்கை அடிப்படையில் தரப்பட வேண்டும் என்பது நியாயமா?'' என்று கேட்டார்கள்.

நம்பிக்கை வாக்கெடுப்பில் தோற்றுல்...

மேலெழுந்தவாரியாகப் பார்க்கும் போது அது நியாயமான கேள்வியாகத் தெரியலாம்.

அதற்குப் பெரியாரும் நீதிக் கட்சியும் அண்ணலும் அளித்த பதில் ஒன்றே ஒன்றுதான்:

'சாதிகள் அனைத்தும் ஒழிந்து ஒன்றே குலம் என்ற நிலை உருவாகிற வரையில் வகுப்புரிமை இருந்தே தீர வேண்டும். இல்லாவிட்டால் எண்ணிக்கையின் அடிப்படையில் கிடைக்க வேண்டிய இடங்கள் பிற்படுத்தப்பட்ட— தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கிடைக்காமல் போய் விடும்'—என்ற கருத்தினை எடுத்துச்சொன்னார்கள்.

இது இந்திய நாட்டு வரலாற்றில் ஒரு பெரும் புரட்சியாக வளர்ந்தது.

இதே அடிப்படையில்தான் டாக்டர் அம்பேத்கார் போர்க்கொடி உயர்த்தினார்.

இந்திய அரசியல் அரங்கத்திலே தனித்தொகுதி முறை வேண்டும் என்று வாதாடினார்.

அம்பேத்கார் கேட்ட தனித் தொகுதி உரிமை கூடாது. அது தீண்டாமையை ஒழிக்க நினைக்கும் பரந்த கருத்துக்கு இடையூறானது—எனவே தனித் தொகுதி கூடாது என்று காந்தியடிகள் வற்புறுத்தியபோதும், டாக்டர் அம்பேத்கார் விடாப்பிடியாக இருந்து தனித் தொகுதிகளில் தாழ்த்தப்பட்டவர்கள்தான் போட்டியிட வேண்டும். ஒரு தொகுதி தாழ்த்தப்பட்டவர்களுக்காக ஒதுக்கப்பட்டு விடுமானால், அதிலே காங்கிரஸ்—கம்யூனிஸ்டு— வேறு எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அந்தந்தக் கட்சிகளிலுள்ள தாழ்த்தப்பட்டவர்கள்தான் போட்டியிட வேண்டும் என்கிற நிலை உருவாக்கப்பட்டது. இதற்கு ஆபத்து வராமல், பார்த்துக் கொண்டாக வேண்டும்.

நாடாளுமன்றம் 20-ம் தேதி கூடுகிறது. ஒரு வேளை சரண்சிங் நம்பிக்கை ஓட்டுகளைப் பெறத் தவறி விடுவாரானால் உடனடியாகத் தேர்தலை நடத்தி ஜனவரி மாதம் நாடாளுமன்றத்தைக் கூட்டியாக வேண்டும்.

ஏன்? எதற்காக?

தாழ்த்தப்பட்ட மக்களுக்கான தனித் தொகுதி முறையிருக்கிறதே, அது பத்தாண்டுகட்கு ஒருமுறை புதுப்பிக்கப்பட வேண்டும்! ஜனவரி மாதத்தோடு அந்தக் காலக்கட்டம் முடிவடைகிறது. ஜனவரி மாதத்திற்குள் அதை மீண்டும் புதுப்பிக்காவிட்டால் அம்பேத்கார் தாழ்த்தப்பட்ட மக்களுக்காகப் போராடிப் பெற்ற உரிமை, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இல்லாமல், போய்—சட்டமன்றமா; நாடாளுமன்றமா அங்கெல்லாம் தாழ்த்தப்பட்டவர்கள் இத்தனை இடம் என்றிருந்த நிலை அடிபட்டுப் போய் விடும்!

20—ம் தேதி நாடாளுமன்றம் கலைந்து விடும் நிலைமை ஏற்படுமானால் ஜனவரிக்குள் தேர்தலை நடத்த வேண்டும். இல்லாவிட்டால் ஜனவரி வரை இந்த ஆட்சியைக் கவிழாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

இதையெல்லாம் சிந்திக்காவிட்டால் தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமை பறிபோய் விடும்!

இதை நான் குறிப்பிடக் காரணம் அந்த அளவுக்கு அம்பேத்கார் தலைமையேற்றுப் போராடிப் பெற்ற உரிமைஅது.

அதைப்போலத்தான் இங்கே நீதிக் கட்சித் தலைவர்கள் பிற்படுத்தப்பட்ட மக்களின், தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைகளுக்காகப் போராடினார்கள்.

நான் வரலாற்றைச் சுட்டிக்காட்டும் போது யாரும் தங்களைப் புண்படுத்துவதாக எண்ணக்கூடாது.

பிராமண சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் அன்றிருந்த நிலையை நன்கு பயன்படுத்திக்கொண்டார்கள்.

1877—ம் ஆண்டு சென்னை மாகாணம் ஒன்றுக இருந்த காலத்தில் யார் யாருக்கு – எப்படிப்பட்டவர் களுக்கு பதவி வாய்ப்புகள் கிடைத்தன என்பது பற்றி ஒரு கண்ணோட்டத்தைச் செலுத்தினால் ''உசூர் சிரஸ் தார்'' என்ற பட்டப்பெயரோடு கலெக்டருக்குச் சமமான அந்தப் பதவியுள்ள இலாகாவில் மொத்த உத்தியோகங்கள் 147, அதன் தலைவராக அன்று, கிருஷ்ணராவ் என்பவர் இருந்தார். அவருக்குப் பின்னே இருந்த 147 பேரும் யார் யார் என்றால், அவருடைய மாமனார்–மாமனாரின் தம்பி–மனைவியின் அண்ணன்–அவனுக்குத் தம்பி–தம்பியின் பையன்கள் என்று எல்லாமே அவரைச் சார்ந்தவர்களாகவே இருந் திருக்கிறார்கள். (சிரிப்பு– கைதட்டல்)

காரணம் அன்று அவர்களும் மற்றவர்களை அண்ட வொட்டாமல் செய்தார்கள் – என்பது மட்டுமல்ல; மற்றவர்களும் அப்பதவிக்குப் போட்டியிடாமல் இருந் தார்கள். அதுபற்றி சிந்திக்காமலே இருந்தார்கள்.

அப்படிப்பட்ட நிலையில் – எண்ணிக்கையில் அதிக மாக உள்ள மக்களுக்கு இட ஒதுக்கீடு அதிகமாக இருக்க வேண்டும்.

தொழிற் கல்லூரியா – பொறியியற் கல்லூரியா– விவசாயக் கல்லூரியா – மருத்துவக் கல்லூரியா இவை களில் இடம்பெறும் வாய்ப்பு வசதிகளை அதிகமாக்க வேண்டும். வேலைவாய்ப்புகளிலும் இடங்களை அதிக மாக்கவேண்டும் என்கிறோம். அதற்கு என்ன செய்ய வேண்டும்?

ஏற்கனவே நோயாளியாக இருக்கின்ற சமுதாயம் அந்த இடத்திலே போய் அமரவேண்டும் என்றால் தூக்கி விடவும், மருந்து கொடுக்கவும் ஆட்கள் தேவை என்ற நிலையில் இருக்கிற சமுதாயத்திற்கு சில சலுகைகளை உரிமைகள் என்ற பெயரால் அளிக்கவேண்டிய அவசியம் பற்றி, அன்றிருந்த பெரியவர்கள் உணர்ந்திருந்தார்கள்.

அப்படி உணர்ந்த காரணத்தினாலேதான் வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவம் கொண்டுவரப்பட்டது.

1928-ம் ஆண்டு சென்னை மாகாண மந்திரிசபைக்கு சுப்பராயன் பிரதம அமைச்சராக இருந்தார். அமைச்சரவையில் மூதறிஞர் முத்தையாவும் பிராமண சமுதாயத்தைச் சேர்ந்த சேதுரத்தின ஐயரும் அமைச்சர்களாக இடம் பெற்றிருந்த காலத்தில்தான், மூதறிஞர் முத்தையா அவர்கள் (அவர் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவரல்ல). எண்ணிக்கை அடிப்படையில் விகிதாச்சாரங்களை ஒதுக்கி தாழ்த்தப்பட்ட – பிற்படுத்தப்பட்ட பிராமணரல்லாத மக்களுக்கு படிப்பிலும் – வேலைவாய்ப்பிலும் இடம் தரவேண்டும் என்ற எண்ணத்தோடு கம்யூனல் ஜி.ஓ. கொண்டுவரப்பட்டது.

அரசியற் சட்டத்தையும் அதிநோக்குடன் வகுத்தனர்!

அது மெல்ல மெல்ல நடைமுறைக்கு வந்தது. இந்திய அரசியல் சட்டம் வகுக்கப்பட்ட நேரத்தில் அம்பேத்கார் தன்னுடைய சமுதாயத்திற்கு நீதி வழங்கப்படவேண்டும் என்று வாதிட்டார். அரசியல் சட்டம் வகுத்தவர்களில் சிலருக்கு கம்யூனல் ஜி. ஓ. கண்ணை உறுத்திக்கொண்டிருந்த காரணத்தால் இனி கம்யூனல் ஜி. ஓ.க்கு அரசியல் சட்டத்தில் இடமில்லை என்று செய்துவிட்டார்கள்! முறைப்படி பிற்படுத்தப்பட்ட மக்களுக்குக் கிடைக்க வேண்டிய உரிமைகளை கிடைக்காத அளவுக்குச் செய்துவிட்டார்கள்.

அரசியல் சட்டம் வெளியிடப்பட்ட அடுத்த நாளே தமிழ் நாட்டிலுள்ள உயர்சாதிக்காரர்கள் அந்த அரசியல் சட்டத்தின் அடிப்படையை வைத்து உயர்நீதி மன்றத்தில் ''இந்த அரசியல் சட்ட அடிப்படையில் கம்யூனல் ஜி. ஓ. செல்லாது'' என்று வழக்குத் தொடுத்தார்கள்.

உயர்நீதிமன்றம் அந்த வழக்கை ஏற்று விசாரித்து கம்யூனல் ஜி. ஓ.வுக்கு எதிர்ப்பாக ஒரு தீர்ப்பை வழங்கியது.

உடனடியாக அன்றைக்குத் தமிழ்நாட்டில் பெரும் கிளர்ச்சி உருவாயிற்று.

பெரியாரும் அண்ணாவும் மாத்திரமல்ல; அன்று சட்டப்பேரவையில் இருந்த காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் நன்றியுணர்ச்சியோடு அவர்களின் பெயர்களை நினைவுபடுத்துகிறேன்—கே. டி. கோசல்ராம், தியாகி சேலம் சுப்ரமணியம் போன்றவர்களெல்லாம் நீதிமன்

றத் தீர்ப்பால் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தின் உரிமைகள் பறிக்கப்படுகின்றன என்று குரலெழுப் பினர்கள். அரசியல் சட்டத்தைத் திருத்த காங்கிரஸ் மந்திரிசபை முன்வரவேண்டும் என்று வாதாடினர்கள்.

அப்போது அமைச்சரவையில் இருந்த கோபால் ரெட்டி அவர்கள் ''நாங்கள் உச்சநீதி மன்றத்தில் அப்பீல் செய்யத் தயாராக இருக்கிறோம் – அந்த அப் பீலும் தோற்று கம்யூனல் ஜி. ஓ. இடம் பெறுமல் போய் விட்டால், நேருவிடம் எடுத்துச்சொல்லி அரசியல் சட் டத்தைத் திருத்தச் சொல்லி எப்படியும் இந்தக் கம்யூ னல் ஜி.ஓ.வின் தாத்பரியம் தகர்ந்து போகாமல் பார்த் துக்கொள்கிறோம்'' என்று உறுதியளித்தார்.

பிறகு அரசியல் சட்டத்தில் 15-4 என்ற பிரிவும் 16-4 என்ற பிரிவும் சேர்க்கப்பட்டது.

'கல்வித் துறையிலும் = சமுதாயத் துறையிலும் பிற்படுத்தப்பட்டவர்கள்' என்ற நிலையில் நேரு அவர் களே அந்தத் திருத்தத்தை ஆதரித்துப் பேசி பெரும் பான்மையான வாக்குகளால் அன்று அந்தத் திருத்தம் வெற்றிபெற்றது.

அந்தத் திருத்தத்தின் அடிப்படையில்தான் அன்று சென்னை ராஜதானி காங்கிரஸ் மந்திரிசபை 25 சத விகிதம் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் 15 சதவிகிதம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் மீதமுள்ள 60 சதவிகிதம் எல்லோரும் போட்டியிடக்கூடிய பொதுப்பட்டியல் என்று ஒரு ஏற்பாட்டைச் செய்தது.

அது போதவில்லை என்ற குறைபாடு பிற்படுத்தப் பட்ட சமுதாயத்தின் தலைவர்களுக்கு இருந்தது.

சட்டநாதன் குழுவும் அதன் சிபாரிசுகளும்!

பேரறிஞர் அண்ணா அவர்களின் மறைவுக்குப் பிறகு-நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற போது, பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக சில நன்மைகளைச் செய் வேண்டும் என்ற எண்ணத்தோடு சட்டநாதன் தலைமை யில் ஒரு குழுவையை அமைத்தேன். அவர் பிற்படுத்தப் பட்டோர்க்கு உள்ள 25 சதவிகிதத்தை 33 சதவிகித மாக உயர்த்த வேண்டும் என்றார்.

பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு மாத்திரம் சலுகை யளித்தால் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நாம் அநீதி

இழைத்ததாக ஆகிவிடாதா? எனவே 8-ல் 6 பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு, 2 – தாழ்த்தப்பட்ட மக்களுக்கு என்று பிரித்து பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 31 சதவிகிதமும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 18 சதவிகிதமும் என்று நாங்கள் உயர்த்திடேனும்!

சட்டநாதன் குழுவின் அறிக்கையின் அடிப்படையில் பிற்படுத்தப்பட்ட மக்கள் வேலைவாய்ப்புக்களையும் மருத்துவக்கல்லூரி, தொழிற்கல்லூரி, விவசாயக் கல்லூரி பொறியியற் கல்லூரி போன்றவற்றிலும், வேலை வாய்ப்பிலும் இடம்பெற 9 ஆயிரம் ரூபாய்க்குக் கீழே வருமானம் உள்ளவர்களைத்தான் பிற்படுத்தப்பட்டோர்என்று அறிவித்து அவர்களுக்கு இந்த உரிமைகளை வழங்க வேண்டும் என்றூர்கள். நான் அதை ஏற்றுக்கொள்ளவில்லை.

பலபேர் நினைக்கிறூர்கள் 'இன்றைய முதலமைச்சர் போட்ட புதிய உத்திரவை கருணாநிதி, முதலமைச்சர் மீதுள்ள அரசியல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக எதிர்க்கிறூன்' என்று நினைக்கிறூர்கள். என்னுடைய பழைய நண்பர்-இன்றைய முதலமைச்சர்கூட அப்படி நினைக்கிறூர் என்று கருதுகிறேன்.

நான் சட்டநாதன் குழு தனது சிபாரிசை அளித்த காலத்திலேயே அதை எதிர்த்தேன்.

என்னுல் நியமிக்கப்பட்ட சட்டநாதன் குழுவின் சிபாரிசையே நான் எதிர்த்தேன். ஆகவே எம்.ஜி.ஆர். ஆட்சிக்கு வந்த பிறகல்ல; எட்டாண்டுகட்கு முன்பே எதிர்த்தேனே, அந்தக் கருத்தில்தான் இன்று வரையிலும் இருக்கிறேன்.

9000 ஆயிரம் ரூபாய்க்கு கீழே உள்ளவர்களெல்லாம் பிற்படுத்தப்பட்டோர் .

9001 ரூபாய் சம்பளம் பெற்றுவிட்டால் முன்னேறியவர்கள் என்றுல் இது இயலுகிற காரியமா? (சிரிப்பு)

பி. டி. ஆர். பழனிவேல்ராசன் அவர்களோடு இரண்டு நாளைக்கு முன்பு சென்னையில் பேசிக் கொண்டிருந்தேன். அப்போது அவர் வேடிக்கையாகவும் வேதனையாகவும் ஒன்றைச் சொன்னுர்.

இப்போது முதலமைச்சர் போட்டிருக்கிற உத்திரவுப்படி ஒரு விவசாயியின் நிலை – மழை பெய்யாவிட்

டால் அவன் பிற்படுத்தப்பட்டவன் – மழை பெய்து விட்டாலோ – அவன் முன்னேறியவன் ஆகிவிடுகிறான்! (சிரிப்பு–கைதட்டல்) எனவே 'ஆண்டவனே மழையில்லாமல் செய்துவிடு என் மகனை மருத்துவக் கல்லூரியில் சேர்க்கவேண்டும்' என்று அவன் வேண்டிக்கொள்ளும் நிலைமை இருக்கிறது (சிரிப்பு) இதுதானே இன்றுள்ள நிலைமை?

நான் இன்னொரு நிகழ்ச்சியையும் உதாரணத்திற்குச் சொல்கிறேன்.

சென்னையில் 800 ரூபாய் சம்பளம் வாங்கும் ஒருவர், ஆண்டு வருமானம் 9 ஆயிரம் ரூபாய்க்கு மேலே ஆகிவிடுவதால் அவர் முன்னேறிய சாதிக்காரராக ஆகிவிடுகிறார்.

தன் மகனை என்ஜினியரிங் கல்லூரியில் சேர்க்க வேண்டும் என்று நீண்ட நாட்களாக அவர் ஆசைப்பட்டார். இன்ஜினியரிங் கல்லூரியில் பெரும் பதவியிலுள்ள ஒருவரைப் போய்க்கேட்டார்.

'என் மகனை என்ஜினியரிங் கல்லூரியில் சேர்க்க வேண்டும்' – இவ்வளவு மார்க் வாங்கி இருக்கிறான் என்று சொன்னார்.

''நல்ல மார்க்குதான் வாங்கியிருக்கிறான். ஆனால் உங்கள் சம்பளத்தைக் கணக்கிட்டால் அவன் போட்டியிடும்போது உயர்ந்த சாதிக்காரனுக்குக் கருதப்படுவான். அவனுக்கு பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்குக் கிடைக்கும் உரிமை கிடையாது'' என்றார்.

''ஏன்?'' என்று பையனின் தந்தை கேட்டார்.

''உங்கள் ஆண்டுவருமானம் ரூ. ஒன்பதாயிரத்தைத் தாண்டுகிறதல்லவா?'' என்று கேட்டார்.

பையனின் தந்தைக்கு நெஞ்சு வலி ஏற்படுகிறது. வீட்டுக்கு வருகிறார் – மாரடைப்பால் மரணமடைகிறார்.

அவர் இறந்து தன்னுடைய மகனை பிற்படுத்தப்பட்ட சாதிக்காரனாக ஆக்கிவிட்டார்.

நான் இன்னொன்றையும் கேள்விப்பட்டேன். உண்மையிலேயே ஐயாயிரம் ரூபாய் ஆண்டு வருமான

முள்ள ஒரு விவசாயி தன் மகன் ஐயாயிரம் ரூபாய் ஆண்டு வருமானமுள்ள குடும்பத்தைச் சேர்ந்தவன் தான் என்பதற்கான சான்றிதழ் வாங்கவேண்டும். அது எவ்வளவு 'சுலபம்' என்பது எல்லோருக்கும் தெரியும்? (சிரிப்பு)

உண்மையிலேயே ஐயாயிரம் ரூபாய் வருமானம் உள்ளவர்தான் என்பதற்கான சான்றிதழை வாங்கவே 'ஏதாவது' தந்தால்தான் முடிகிறது

இருபதாயிரம் ரூபாய் வருமானமுள்ள ஒரு பணக்காரர் கொஞ்சம் அதிகமாகவே 'தரவேண்டியதை' தந்து எட்டாயிரம் ரூபாய்தான் வருமானம் என்று எழுதி வாங்கிக்கொள்கிறார்.

எதை ஒழிக்கப் போகிறோம்—ஒழிக்கப் போகிறோம் என்று சொல்லுகிறார்களோ அதை மேலும் அதிகமாக்கத் தான் இதுபோன்ற உத்திரவுகள் வழிவகுக்கும்!

காலையிலே கூட நிருபர்களிடத்தில் ஒன்றைச் சொன்னேன்.

ஒரு என்ஜினியரிங் கல்லூரி மாணவன் நேர் காணல் பேட்டிக்கு வருகிறான்.

அதிகாரி கேட்கிறார்—

''நீ ஃபிரிஜ் பார்த்திருக்கிறாயா? அதிலுள்ள பார்ட்ஸ்களைத் தெரியுமா?''

''தெரியும்!''

''எங்கே பார்த்தாய்?''

''எங்கள் வீட்டில் இருக்கிறது பார்த்தேன்!''

''அம்பாசிடர் காரின் பார்ட்ஸ்களைத் தெரியுமா?''

''தெரியும்!''

''எங்கே பார்த்தாய்?''

''என் வீட்டிலேயே இருக்கிறது நான் பார்த்திருக்கிறேன்''

—இப்படிச் சொன்ன பையன் தன் குடும்பத்தின் ஆண்டு வருமானம் ஐயாயிரம் ரூபாய் என்று சான்றிதழ் கொடுத்திருக்கிறான்.

ஆக, இப்படிப்பட்ட குழப்பங்களுக்குத்தான் புதிய உத்திரவு ஆளாக்குகிறது.

இதையெல்லாம் முதலமைச்சர் சிந்தித்துப் பார்க்கட்டும்.

ஆளும் கட்சி செய்கிற எல்லாவற்றையும் எதிர்ப்பது எதிர்க்கட்சிக்கு இலக்கணமாகாது!

வ. சுப. மாணிக்கம் இன்று மதுரை பல்கலைக்கழக துணைவேந்தராக ஆக்கப்பட்டிருக்கிறார் என்றால் அதைப் பாராட்டுகிறேன்.

தூத்துக்குடி தீவிபத்தில் பாதிக்கப்பட்டிருப்பவர்களுக்கு ஆறுதல் கூற முதல்வர் சென்றார் - அதையும் பாராட்டுகிறேன்.

அதே நேரத்தில் – தூத்துக்குடி சம்பவத்திற்கு பிறகு இனிமேல் திரை அரங்குகள் கீற்றுக்கொட்டகைகளாக இருக்கக்கூடாது என்றால் அதற்காக எதிர்க்கட்சித் தலைவன் என்ற முறையில் யோசனை சொல்கிறேன்.

அதுபோல எதிர்க்கட்சி ஏதாவது சொன்னால் ஒரு ஆளும்கட்சி கேட்கவேண்டுமே தவிர, எதிர்க்கட்சி என்ன சொன்னாலும் கேட்கமாட்டோம் என்று எந்த நாட்டிலுள்ள ஆளும் கட்சியும் இருக்கக்கூடாது!

வள்ளுவர் பாடியிருக்கிறார—

''எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும்
அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு''—

''இடிப்பாரை இல்லா ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானும் கெடும்!''—

—என்று இடித்துச் சொல்லும் எதிர்க்கட்சி இல்லாவிட்டால், கெடுப்பவர்கள் இல்லாமலேகூட ஆட்சி சீரழிந்து போய்விடும்!

நல்லதைச் சொன்னால் 'நீ யார் கேட்பது? என்று ஆணவமாகக் கேட்கக்கூடாது.

''உன் பிள்ளை குட்டிகளுக்காக நீ கேட்கிறாய்!'' என்கிறார்கள்.

என் பிள்ளைகள் யாரும் இப்போது கல்லூரிகளுக்கோ – வேலைவாய்ப்புகளுக்கோ மனுப் போடவில்லை.

நான் என் பிள்ளைகளுக்காகக் கேட்கவில்லை. என் பிள்ளைகள் என்ன படித்தார்கள் என்பதேகூட எனக்குச் சரியாகத் தெரியாது.

அந்த அளவுக்குத்தான் என்னுடைய பந்தம் – பாசம் – சொந்தம் எல்லாம் இருக்கிறது.

எனவே நாங்கள் எங்களுடைய பிள்ளை குட்டிகளுக்காக அல்ல, வருங்கால சந்ததியினருக்காகப் பேசுகிறோம்.

ஏழைகளுக்கு ஆதரவாகத்தானே நாங்கள் செயல் படுகிறோம் – இதற்கு எதிராக கருணாநிதி பேசுகிறார் என்று சொல்வார்கள் – இந்தப் பேச்சில் மாணவர்களும், பேராசிரியர்களும் ஏமாந்துவிடாமல் விழிப்பாக இருக்கவேண்டும்.

பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தில் வசதி படைத்தவர்கள் இருக்கிறார்கள் – ஒன்பதாயிரம் ரூபாய்க்கு மேலே ஒரு ரூபாய் அதிகமானாலும் அவன் முன்னேறிய சாதிக்காரனாகக் கருதப்படுவான் என்று இன்றைக்கு இந்த அரசு போட்டிருக்கிற உத்திரவு சொல்கிறது.

அதேபோல தாழ்த்தப்பட்டவர்களிலும் வருமான வரம்பு காட்டி ஏழை பணக்காரன் என்று பிரிக்க முடியுமா?

இன்று பிற்படுத்தப்பட்ட மக்களைப் பாதிக்கும் இந்த உத்திரவு எதிர்காலத்தில் தாழ்த்தப்பட்ட மக்களைத் தாக்காது என்பதற்கு என்ன உத்திரவாதம்?

எதிர்க்கட்சிக்காரர்கள் சொல்கிறார்கள் என்றுலே எதையும் கேட்காமல் பிடிவாதம் காட்டவேண்டுமா?

இந்த ஆண்டு நாம் எத்தனையோ தலைவர்களின் நூற்றாண்டு விழாக்களைக் கொண்டாடி இருக்கிறோம்.

இந்தியாவின் தலைசிறந்த தியாகி – இந்தியப் போர்க்களத்தின் தளபதி சிப்பாய் முகமதலி

அவர்களுக்கும்-தன்மான இயக்கத் தளநாயகர் தந்தை பெரியார் அவர்களுக்கும் நூற்றுண்டு விழா—

பசுமலையில் பிறந்து பைந்தமிழைக் காத்து வளர்த்து – இந்திக்கு ஆதிக்கமா தமிழுக்கு ஆபத்தா என்று கேட்டு – 'தமிழ்த்தாயின் காலிலே எவனுவது கால் வைத்தால் அவன் தலையில் என் காலை வைப்பேன்' என்று சொன்ன நாவலர் சோமசுந்தர பாரதிக்கு நூற்றுண்டு விழா!

இப்படிப்பட்ட நூற்றுண்டு விழாக்கள் கொண்டாடப்படும் நேரத்தில் 60 ஆண்டுக் கால வரலாற்றை நாம் மறந்துவிடலாமா? அதைப்பற்றி சிந்திக்க வேண்டாமா? என்பதைக் கேட்டுக்கொள்ள இந்த நல்ல நேரத்தை எடுத்துக் கொண்டேன்!

சிந்திப்பது உங்கள் கடன்!

★

தி.மு.க. அறிவாலயம்
ஆய்வக
நூல் நிலையம்
சென்னை-18.

இன்றைய தமிழகம் - குமுறும் எரிமலை !

உடன்பிறப்பே,

கடலூர் பெரியார் நூற்றாண்டுவிழாவில் எம்.ஜி.ஆர். பேசிவிட்டார்! ஆம்; அறிவித்தே விட்டார்! பிரகடனப் படுத்திவிட்டார்! பிற்படுத்தப்பட்ட மக்களின் தலையில் இப்போது அடித்துள்ள அடி போதாதென்று மேலும் ஒரு அடி கொடுக்கப்போகிறேன் என்று பெரியார் விழா விலேயே முழக்கம் செய்துவிட்டார்.

இரண்டொரு தலைமுறைகளாகத்தான் கல்வித் துறையிலும் வேலைவாய்ப்புக்களைப் பெறுகின்ற நிலையிலும் தலைதூக்கி வருகிற பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தின் வகுப்பு அடிப்படையில் தரப்படும் வகுப்புரிமை வழியை மூடிவிட்டு வருமான அடிப்படையில் பிற்படுத்தப்பட்ட மக்களைப் பாதுபடுத்தி, பெரியார், அண்ணா, காமராசர், அவர்கள் வழிநின்று கழக அரசு கட்டிக் காத்துவந்த வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்திற்குச் சாவுமணி அடிக்கும் எம். ஜி. ஆரின் புதிய உத்திரவை திரும்பப் பெறவேண்டுமென நமது கழகத்தின் சார்பில் கடந்தகால வரலாற்றுச் செய்திகளையும், புள்ளி விவரங்களையும் எடுத்துக்காட்டி வலியுறுத்தி வருகிறோம்.

மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி போன்ற தொழில் கல்லூரிகளில் சேருவதற்கும், அரசுத்துறை வேலை வாய்ப்புக்களுக்கும் பிற்படுத்தப்பட்டோருக்கு இட ஒதுக்கீடு 25 சதவிகிதம் என்றிருந்ததைக் கழக ஆட்சிக்காலத்தில் 1970-ல் 31 சதவிகிதமென்று உயர்த்தப்பட்டது. எல்லா வகுப்பு மாண

வர்களும் போட்டியிடக்கூடிய பொதுப் பட்டியலிலும் 31 சதவிகிதமன்னியில் பிற்படுத்தப்பட்டோரும், 18 சதவிகிதமன்னியில் தாழத்தப்பட்டோரும், இடையூறின்றிப் போட்டியிட்டு அந்த 51 சதவிகித இடஒதுக்கீட்டிலும் கணிசமான இடங்களைப் பெற வழிவகைகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தன. எனவே பிற்படுத்தப்பட்டோருக்கு 31 சதவிகிதத்தை விடவும், தாழ்த்தப்பட்டோருக்கு 18 சதவிகிதத்தை விடவும் அதிக சதவிகித இடங்கள் கிடைக்க வாய்ப்புகள் இருந்தன.

இப்போது எம். ஜி. ஆர். போட்டுள்ள உத்திரவு என்ன சொல்லுகிறது? பிற்படுத்தப்பட்டோரில் ஒன்ப தாயிர ரூபாய்க்குக் கீழே ஆண்டு வருமானம் உள்ளவர் களுக்கு மட்டுமே 31 சதவிகித இடங்களைப் பெறமுடியும் என்று திட்டவட்டமாகக் கூறுகிறது. ஒன்பதாயிரத் துக்கு மேல் வருமானமுடைய பிற்படுத்தப்பட்டவர்கள், இந்த உத்திரவின்மூலம் திடீரென உயர்சாதிக்காரர்க ளாக மாறி; இனிமேல் அவர்கள் பொதுப்பட்டியலில் (Open Competition) ஏற்கெனவே பல தலைமுறை களாக முன்னேறியுள்ள சமுதாயத்தினருடன் போட்டி யிட்டுத் தேர்வுபெற மோதுதல் நடத்தவேண்டும். இதனுல் ஏற்படக்கூடிய விளைவுகள் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைப் பெருமளவுக்கு எதிர்காலத்தில்சீரழித்து விடும்.

31 சதவிகிதமும் பிற்படுத்தப்பட்டோரில் உள்ள ஏழைகளுக்குத்தானே ஒதுக்கப்படுகிறது என்று பதில் சொல்கிறார்கள்.

பிற்படுத்தப்பட்ட வகுப்பு – முன்னேறிய வகுப் பினர் – என்ற பாகுபாடு பொருளாதார அளவுகோலை வைத்து நிர்ணயிக்கப்படுவதல்ல!

இன்று ஏழையாக இருப்பவன், நாளை வசதி படைத்தவனுகிவிடுகிறான். இன்று வசதிகளுடன் வாழ் பவன் நாளை ஏழையாக ஆகிவிடுகிறான், ஆனல் சமூக நீதியாகவும் – கல்வி, வேலைவாய்ப்பு அடிப்படையிலும் ஆண்டாண்டுகாலமாக சமுதாயத்திலே பிற்படுத்தப் பட்ட சமூகத்தினர் பல்வேறு பின்தங்கிய சாதிகளைச் சேர்ந்தவர்களாகவே இருக்கின்றனர். அதனல்தான் அவர்களுக்கென ஏற்பட்டுள்ள வகுப்புரிமைக்கொள்கை;

பொருளாதார அடிப்படையில் வழங்கப்படாமல் சாதி அமைப்புக்கள் இருக்கும் வரையில்; அதாவது ஒன்றே குலம் என்ற நிலை உருவாகும் வரையில் சமூக அடிப்படையில்தான் வழங்கப்பட வேண்டுமென்று பெரியாரும், அண்ணாவும் தங்களின் வாழநாள் முழுதும் குரல் எழுப்பிவந்தார்கள்.

ஏழைகளுக்கு நன்மை செய்கிற உத்திரவு என்றும், அதைக் கருணாநிதியும் வீரமணியும் எதிர்க்கிறார்கள் என்றும் எம். ஜி. ஆர். பேசுவதின்மூலம் மக்களைத் திசை திருப்பப் பார்க்கிறார்.

கருணாநிதி, வீரமணி மட்டுமல்ல; அவர்கள் சார்ந்துள்ள இயக்கமும், பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்களில் தெளிவுபடைத்தவர்களும் எம். ஜி. ஆரின் புதிய உத்திரவை முழுமூச்சுடன் எதிர்ப்பதை எம். ஜி. ஆர். மறைத்துப் பயனில்லை.

ஏழைகளுக்குத் தொழில் கல்லூரிகளில் சேர்வதற்கும், வேலைவாய்ப்புகள் கிடைப்பதற்கும் வழிவகை செய்து உரிமைகள் அளிக்கப்பட வேண்டுமென்பதை யாரும் எதிர்க்கவில்லை. தி. மு. கழகமோ, திராவிடர் கழகமோ – அப்படியொரு நிலையை எடுக்கவே இல்லை!

தி. மு. க. பொதுக்குழுவின் தீர்மானம் மிகத் தெளிவாகவே இருக்கிறது.

பிற்படுத்தப்பட்டவருக்கென ஏற்கனவே ஒதுக்கப்பட்டுள்ள 31 சதவிகிதத்தில் ஏழை பணக்காரன் என்று பாகுபாடு செய்து தலையெடுத்துவரும் அந்தச் சமுதாயத்தைப் படுகுழியில் தள்ளாதீர்கள்!

பிராமணர், முதலியார், செட்டியார், பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் இப்படி எல்லா சாதியினர்க்கும் ஒதுக்கப்பட்டுள்ள 51 சதவிகிதப் பொதுப்பட்டியலில் கர்நாடக அரசைப்போல் 15 சதவிகித அளவுக்கு எடுத்து; அந்த 15 சதவிகிதத்தில் உயர்ந்தசாதி, பின்தங்கியசாதி, தாழ்த்தப்பட்டோர் அனைவரிலும் உள்ள ஏழைகளுக்கு ஒரு குறிப்பிட்ட வருமான வரம்பு அடிப்படையில் தொழில்கல்லூரிகளிலும் வேலைவாய்ப்புகளிலும் இடமளித்திடுக என்றுதான் நானும் சரி; நமது கழகமும் சரி – தொடர்ந்து கூறிவருகிறோம்.

ஆனல் முதலமைச்சர் இராமச்சந்திரன் கடலூரில் நடந்த பெரியார் விழாவில் (அரசாங்கம் நடத்திய விழா) என்ன சொல்லியிருக்கிறார் தெரியுமா?

''அடுத்த ஆண்டு முதல் உயர் சாதியில்
உள்ள ஏழைகளுக்கு விகிதாசார முறை
பின்பற்றப்படும். 51 சதவிகிதப் பொது
இடத்தில் இந்த விகிதாசாரம் உயர்சாதியில்
உள்ள ஏழைகளுக்கு ஒதுக்கப்படும் என்பதை
இப்போதே சொல்லிவிடுகிறேன். நண்பர்
கருணாநிதி இதற்காகவும் ஒரு போராட்டம்
தொடங்க இப்போதே தயாராகலாம்.
அவருக்குப் போராட்டம் தவிர வேறு
வேலையில்லை.''

நண்பர் எம். ஜி. இராமச்சந்திரனின் கடலூர் கர்ச்சனைதான் இது!

இந்த அறிவிப்பில் உள்ள புதிய ஆபத்தை எம். ஜி. ஆரின் தயவை நாடிப் பல் இளித்துக் கிடப் போர் தவிர; மற்ற நடுநிலையாளர்கள் அனைவரும் எண்ணிப்பார்க்க வேண்டும்.

இப்போது பிற்படுத்தப்பட்டோருக்கு 31 சத விகிதம் கல்விக்கும், வேலை வாய்ப்புக்கும் என்று இருந்ததை; பிற்படுத்தப்பட்டோரில் ஏழைகளுக்கு மட்டுமே என்று புதிய உத்திரவின்மூலம் மாற்றி விட்டார் எம். ஜி. ஆர்!

எனவே ஒன்பதாயிர ரூபாய்க்கு மேல் ஆண்டு வருமானமுடைய பிற்படுத்தப்பட்டவர்கள் பொதுப் பட்டியலில் உள்ள 51 சதவிகிதத்தில் முன்னேறிய சமுதாயத்தினருடன் போட்டியிடும் சூழ்நிலை உரு வாக்கப்பட்டுவிட்டது.

அதற்கும் மேலாக இப்போது கடலூரில் எம். ஜி. ஆர். அறிவித்துள்ளபடி பொதுப்பட்டியலில் உள்ள 51 சதவிகிதத்தில் பத்து அல்லது பதினைந்து சதவிகிதம் உயர்சாதியில் உள்ள ஏழைகளுக்கு என்று ஒதுக்கிவிட்டால் தாழத்தப்பட்டோருக்கும் 9000க்கு மேல் ஆண்டு வருமானமுள்ள பிற்படுத்தப்பட்டோருக்கும், பொதுப்பட்டியலில்; முன்னேறிய சமூகத்துடன் போட்டியிடக் கூடிய இடங்கள் 36 சதவிகிதமாகக் குறைந்துவிடக் கூடும். 51 சதவிகிதத்தில் பொதுப்பட்டியலில் முன்பிருந்த நடைமுறையில் கணிசமான இடங்களைப்பெற்று வந்த பிற்படுத்தப்பட்டோரும், தாழத்தப்பட்டோரும் எம். ஜி. ஆரின் கடலூர் அறிவிப்பின்படி 36 சதவிகிதத்திற்குள் உயர்சாதிக்காரர்களுடன்போட்டியிடவேண்டிய அளவுக்கு வாய்ப்புக்குறைந்தவர்களாக ஆகிவிடுகிறார்கள்

பொருளாதாரத்தில் பலவீனமானவர்கள் எல்லா சாதியிலும் இருக்கிறார்கள். அவர்களுக்குக் கல்வித்துறை, வேலைவாய்ப்புத்துறையில் இடங்கள் கிடைப்பதற்கான சலுகைகள் இதுவரையில் பல கட்டங்களில் படிப்படியாக அளிக்கப்பட்டு வந்தபோதிலும் தொழில் கல்லூரி அட்மிஷன், வேலைவாய்ப்பு ஆகியவற்றிலும் உரிய உரிமையான இடஒதுக்கீடு செய்வதுபற்றியும் நமக்கு மகிழச்சியே தவிர மறுப்பு எதுவுமில்லை.

அதற்கு நாம் கூறும் ஆலோசனை என்ன?

மீண்டும்ஒருமுறை நினைவுபடுத்துகிறேன்!

ஃ ஏழை பணக்காரன் என்ற பாகுபாட்டை பிற்படுத்தப்பட்டோருக்கு என இருக்கின்ற 31 சதவிகிதத்தில் செய்யாதீர்கள்!

ஃ எல்லோரும் போட்டியிடக்கூடிய 51 சதவிகிதத்தில் பிராமணர், முதலியார், செட்டியார், பிள்ளைமார், பிற்படுத்தப்பட்டோர், தாழத்தப்பட்டோர் போன்ற எல்லா சாதியிலும் உள்ள ஏழைகளுக்கு 15 சதவிகிதம் தனியாக ஒதுக்கிடுங்கள்!

ஃ மீதமுள்ள 36 சதவிகிதம் பொதுப் பட்டியலாக இருக்கட்டும்.

இதனைச் சிந்தித்துப் பார்த்திட மறுத்துவிட்டு, பிற்படுத்தப்பட்டோரையும் இருகூறுகப் பிரித்து அவர்களிலேயே ஏழை பணக்காரன் என்று வகுத்து, வகுப்புரிமையின் அடிப்படைக்கே ஆபத்தை ஏற்படுத்தி விட்டு, இப்போது 51 சதவிகிதப் பொதுப்பட்டியலிலும் உயர்சாதி ஏழைகளுக்கு அடுத்த ஆண்டு தனி விகிதா சாரம் வழங்கப்போகிறேன் என்று எம். ஜி. ஆர். திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறார்.

இப்படியும் ஒரு ஆபத்தான கருத்தைத் தெரி வித்துவிட்டு, ''நண்பர் கருணாநிதி அடுத்த ஆண்டு இதற்காக ஒரு போராட்டம் நடத்த இப்போதே தயா ராகலாம். அவருக்கு வேறு வேலை இல்லை'' என்றும் நண்பர் எம். ஜி. இராமச்சந்திரன் அறைகூவல் விடுத் துள்ளார். அல்லது கேலி புரிந்துள்ளார்!

தி. மு. க. ஆட்சிக்காலத்தில் எம். ஜி. ஆர். எத்தனை போராட்டங்களைத் தூண்டிவிட்டார் என் பதை அவர் கட்சியின் பழைய ஏடுகளைப் புரட்டினாலே தெரியும்!

அந்தப் போராட்டங்களில் அவர் குதிக்கமாட்டாரே தவிர; கருணாநிதியின் கொடும்பாவி கொளுத்துகிற போராட்டத்திலிருந்து, கழக அமைச்சர்கள் செல்லு மிடமெல்லாம் கறுப்புக் கொடி காட்டுகிற போராட் டங்களைத் தூண்டிவிட்டு நடத்தியவர் எம். ஜி. ஆர். அல்லவா?

கழக எம்.எல்.ஏ.க்களின் வீடுகளுக்கு அ.தி.மு. க.வினர் ஊர்வலமாகச் சென்று கண்டன மனுக்கள் கொடுக்கிற போராட்டத்தை எம். ஜி. ஆர். நடத்தி யதை மறந்துவிட்டாரா?

விவசாய சங்கத் தலைவர் நாராயணசாமி நாயுடு கழக ஆட்சியில் மறியல் செய்ய வந்தபோது எம். ஜி. ஆர். கட்சித் தலைவர்கள் அவருக்கு மாலை அணிவித்து கோட்டையை நோக்கி வழி அனுப்பிவைக்கவில்லையா?

போலீஸ்காரர்களின் மனைவிகளைக் கொண்டு ஒரு போராட்டம் நடத்தப்போவதாக இதே எம். ஜி. ஆர். அறிவிக்கவில்லையா?

தொழிலாளர்கள் சில பகுதியினர் கழக ஆட்சியில் நடத்திய போராட்டங்களுக்கு இந்த எம். ஜி. ஆர். இருபதாயிரம் முப்பதாயிரம் என்று நன்கொடை கொடுத்து ஊக்கப்படுத்திய கதைகள் எல்லாம் சில மாதங்களுக்கு முன் அம்பலமாகவில்லையா?

தெருவில், சாலைகளில் ஓடிய பஸ்களை, லாரிகளை— எம். ஜி. ஆர். ரசிகர்கள் உடைத்து நொறுக்கிக் கொளுத்திடவில்லையா? அந்தக் கிளர்ச்சிக்கு எம். ஜி. ஆர். நிதி யுதவி செய்திடவில்லையா?

இராமநாதபுரம் கூட்டத்திலே கழக அமைச்சர் மன்னையின் நெற்றியை நோக்கிக் கல்வீசி, எம். ஜி. ஆர். கட்சியினர் ரத்த வெறிக்கூத்து நடத்தவில்லையா?

அப்போது திருத்தணிக் கூட்டத்திற்குச் சென்ற நண்பர் வேழவேந்தனின் கார் எம்.ஜி.ஆர். கட்சியினரால் கொளுத்தப்பட்டுச் சாம்பலாக்கப்படவில்லையா?

அந்த எம். ஜி. ஆரா; இன்றைக்கு ''போராட்டம்'' என்ற சொல்லைக் கேட்டாலே துள்ளிக் குதிக்கிறார்!

உடன்பிறப்பே! தமிழ்நாட்டு மக்களின் குரல் வளையையே நெறிக்கிற அளவுக்கு எம்.ஜி.ஆரின் உத்திரவும், அடுத்த ஆண்டு நடைமுறைப்படுத்தப்போவதாக இந்த ஆண்டு கடலூரில் அறிவித்துள்ள திட்டமும் அமைந்துவிட்ட பிறகும்—நாம் சும்மா கிடக்கச் சோற்றுருல் அடித்த பிண்டங்கள் அல்ல! சொரணை கெட்டவர்களுமல்ல! உடம்பில் சூடற்றுப் போய்விட்ட நடைப்பிணங்களுமல்ல!

பெரியார் விழா நடத்துகிறோம் — பெரியார் பெயர் சூட்டுகிறோம் — என்று விளம்பரம் செய்து கொண்டே, அண்ணாவின் பெயரைக் கட்சிக்கு வைத்துக்கொண்டே — திராவிடர் இயக்கத்தின் அடித்தளத்தைத் தகர்த்தெறிந்து — பெரியார், அண்ணா இருவரின் கொள்கைகளுக்குக் கல்லறை கட்டுவதை; நம்மைப்

போன்றோர்; கைகட்டி – வாய் புதைத்து – கண்ணை மூடி – சகித்துக்கொண்டு – எதிர்த்திட முடியாத எடுபிடிகளாக இருந்திட இயலாது!

வகுப்புரிமையில் கைவைத்து அதனை மந்தி கை மலர் மாலையாக ஆக்கும் மமதைகொண்ட ஆட்சியாளர் எவராயினும் அவரை எதிர்த்துப் போர்க்கொடி உயர்ந்தே தீரும்!

தமிழகம், இன்று குமுறிக் கொண்டிருக்கும் எரிமலை!

அவ்வளவுதான் சொல்லமுடியும் எம்.ஜி. இராமச்சந்திரனுக்கு!

நமது வேண்டுகோள் – ஆலோசனை – மாற்றுத் திட்டம் – இவற்றைப் பெரியார் –அண்ணு இருவரின் கொள்கை அடிப்படையில் எம்.ஜி.ஆர். ஏற்றுக்கொள்ள மறுப்பாரேயானால்—

உடன்பிறப்பே!

''ஆறிலும் சாவுதான்

நூறிலும் சாவுதான்

ஆனது ஆகட்டுமே!''

என்று போர்ப்பரணி பாடி நமது படை வீரர்கள்; தங்கள் உயிரைத் தத்தம் செய்து தன்மான இயக்க இலட்சியம் காத்திடத் தயாராவதைத் தவிர வேறுவழியில்லை!

அதில் முதற் களப்பலியாக இதோ; உன் அன்பு உடன்பிறப்பு நான் தயாராக இருக்கிறேன் என்பதை உனக்குச் சொல்லவும் வேண்டுமா!

அன்புள்ள,

மு. க.

தி.மு.க. தலைமைக் கழக அறிவகம்
ஆய்வக
நூல்நிலையம்
சென்னை-18.